**பாதஹேவாஹெட பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பாதஹேவாஹெட பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குச் சொந்தமான 05 காணிகளின் பெறுமதியும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேதனப் பசளைச் செயற்களத்தில் காணப்பட்ட பசளை இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 72,416,396 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 49,094,066 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,210,793 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,365,596 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

04 கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால், ரூபா 47,252,891 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 இன் ஏற்பாடுகளின் படி, சபையிடம் உள்ள சகல காணி கட்டிடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையும் பரீட்சிப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,481,289 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,628,643 ஆகக் காணப்பட்டமையால் மிகையில் ரூபா 3,147,354 தொகையான குறைவைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

பிரதேச சபையின் நிதி நிலைமையும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கிய விகிதாசாரங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) செயற்பாட்டு வருமான மிகை

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளின் போதுமான நிதி விளைவுகளின் மிகை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாகக் கருத்திற்கொள்கையில் அந் நூற்றுவீதத்தில் குறைவொன்று காண்பிக்கப்பட்டது.

(ஆ) மொத்த வருமானமும் மொத்த செலவினமும் ஒப்பிடல்

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளின் மொத்த செலவினத்திற்கு மொத்த வருமானத்தின் சதவீதமாகக் கருத்திற்கொள்கையில் இந் நூற்றுவீதத்தில் அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் இது நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையைக் காண்பித்திருக்கவில்லை.

(இ) திரண்ட நிதியம்

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளினதும் திரண்ட நிதிய மீதியில் தொடர்ச்சியான குறைவைக் காணக்கூடியதாக இருந்தது.

(ஈ) மிகை

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மிகை, முன்னைய ஆண்டின் ஒட்டுமொத்த மிகையுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 9,788,825 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக 2015 ஆம் ஆண்டிற்கான 02 வருமான விடயங்களில் குறைவும் 03 செலவின விடயங்களில் அதிகரிப்பும் அடிப்படைக் காரணமாகியிருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | 2015 ஆண்டில் பட்டியலிடப்பட்டவை | மிகைக் கட்டணம் | கொடுத்த கழிவு | நிலுவையில் பெறப்பட்டவை | பட்டியல் இடப்பட்டவற்றில் பெறப்பட்டவை | 2015.12.31.01 உள்ளவாறான நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| வீத வரி | 4,274,748 | 2,329,390 | 240,141 | 64,621 | 578,959 | 1,265,217 | 4,933,054 |
| ஏக்கர் வரி | 1,023,444 | -- | -- | -- | -- | -- | 1,023,444 |
| குத்தகை வாடகை | 388,376 | 1,395,420 | 78,756 | -- | 354,635 | 1,054,286 | 453,631 |
| அனுமதிப் பத்திரம் | -- | 2,448,629 | -- | -- | -- | 2,448,629 | -- |
| ஏனையவை | 33,712,713 | 24,935,615 | -- | -- | 3,611,446 | 19,276,287 | 35,760,595 |
| மொத்தம் | | | | | | | 42,170,724 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,170,724 தொகையான நிலுவை வருமான மீதி காணப்பட்டது.

### 2.3.2 வீதவரி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் உள்ளவாறு ரூபா 4,274,748 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், பட்டியல் இடப்பட்டவைகள் ரூபா 2,329,390 ஆகும். இம் மீதிகளில் ஆண்டின் போது அறவீடு செய்த சதவீதம் முறையே 13 சதவீதமாகவும் 54 சதவீதமாகவும் காணப்பட்டமையால், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 4,933,054 ஆகும். அவற்றில் ஒரு வருடத்திற்கு மேல் ரூபா 3,695,789 இற்கான நிலுவை மீதி நிலவிய போதிலும் அத்தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்களுக்கு ஒரு முறை புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு, வீத வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், சபை இறுதியாக 2008 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டின் படி, மீளாய்வாண்டின் போதும் வீத வரி அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 08 அரசாங்க நிறுவகங்களில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த வீதவரி மீதி ரூபா 1,134,384 தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,023,444 இற்கான நிலுவை மீதி 03 வருடங்களுக்கு முன்பிருந்தே நிலவிவருவதுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக முறையான ஓர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கடை வாடகை**

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் ரூபா 388,376 தொகையான நிலுவை மீதியொன்று நிலவியதுடன் பட்டியலிடப்படுவது ரூபா 1,395,420 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 453,631 தொகையான நிலுவை மீதி நிலவியதுடன் இதில் ஒரு கடையில் இருந்து 03 வருடங்களுக்கு முன்னர் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 231,410 தொகையான மீதியும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு உரித்தான தெல்தொட்ட பிரதான வீதியின் 03 கடைகள் குத்தகைக் கால எல்லை முடிவுற்றதை அடுத்து மீள கேள்வி கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக சபைக்கு ரூபா 251,400 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, நீண்ட காலமாகக் குத்தகைக்கிடப்பட்டிருந்த தெல்தொட்ட மற்றும் கலஹா வில் உள்ள 59 கடைகளின் குத்தகை திருத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீர்க் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) உடன்படிக்கையின் பிரகாரம் நீர்க் கட்டணத்தை அறவிட்டிராத காரணத்தால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,693,378 தொகையான நிலுவை மீதி ஒன்று நிலவியதுடன், நீர் பாவனையாளர்களுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் 02 (iv) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலுவையான நீர்க் கட்டண மீதியில் தவறுதலாக பட்டியல் இடப்பட்ட ரூபா 1,123,120 தொகையான அறவிடப்படாத மீதியும் காணப்பட்டது.

(இ) 08 நீர்த் திட்டங்களுக்கு உரித்தான 3460 நீர்ப் பாவனையாளர்களில் 2642 பேருக்கு நீர் மானிகளை ஸ்தாபிக்காது நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.6 ஏனைய வருமானம்**

மீளாய்வாண்டின் போதான முச்சக்கர வண்டி தரிப்பதற்கான கட்டணமாக ரூபா 846,000 தொகை பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 501,450 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத்

தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 23,565,766 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கோப்பில் 34 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராததன் காரணமாக சில உத்தியோகத்தர்கள் பல விடயங்களிற்காக கடமை மேவுகை மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், திட்டங்கள் அங்கீகரிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய 02 ஆண்டுகளின் போதும் கிடைக்கப்பெற்றிருந்த 644 கட்டிட விண்ணப்பங்களில் 333 விண்ணப்பங்களிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ்கள் இவற்றில் 60 விண்ணப்பங்களிற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 195 திசெம்பர் 27 ஆம் திகதிய 95/9 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் கணக்குச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 29,635 தொகையான நிலுவையான கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அத்துமீறிய நிர்மாணிப்புகள் தொடர்பாக சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளின் படி, 10 அத்துமீறிய நிர்மாணிப்புகள் தொடர்பாக அத்துமீறிய நிர்மாணிப்புகளை மேற்கொண்ட நபர்களுக்கு அத்துமீறிய கட்டளை அறிவித்தல் மாத்திரம் விடுக்கப்பட்டிருந்ததுடன் வேறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெல்வுட் எகொடகம கொலனி வீதியில் உள்ள சுவர் அபிவிருத்தி செய்தல் - ரூபா 694,215

மதிப்பீட்டின் செலவின விடய இல. 03 இன் 6x9 அங்குல அளவிலான கருங்கல் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த அளவைப் பார்க்கிலும் பெரிய அளவிலான கல் பயன்படுத்தப்பட்டு பாதுகாப்புச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் சுவரின் வெளிப்புறத்தில் 25 மி.மி. அளவு தடிப்பிலான பூச்சுக் கலவை இடப்பட வேண்டிய போதிலும் நிர்மாணிக்கப்பட்ட சுவரின் வெளிப்புறத்தில் பூச்சுக் கலவை

இடப்பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டின் படி 1:5 சீமேந்தும் மணலும் கலக்கப்பட்டு பூச்சு இடப்பட்டு சுவர் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், எளிதில் உடைக்கக் கூடிய வகையில் நலிவான பூச்சுக் கலவைப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இடைவெளிகள் முறையாக பூச்சிடப்பட்டு மூடிவிடப்பட்டிராமை 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) மொறகொல்ல சமன் தேவாலய வீதி அபிவிருத்தி - ரூபா 300,000

---

கொங்கிரீட் வீமியின் ஒரு பகுதியில் குறுக்குப் பகுதியில் வெடிப்பு நிலை காணப்பட்டது. இவ்வாறே, வீதியின் இரு மருங்கிலும் கொங்கிரீட் கலவை நலிவான நிலையில் காணப்பட்டதுடன் ஹனிகொம் அறிகுறிகள் வெளிப்பட்டிருந்தன.

(இ) மொறகொல்ல முதல் மஹவங்குவ வரையிலான பிரதான விதியின் அபிவிருத்திக் கட்டம் II - ரூபா 190,000

---

கொங்கிரீட் வீதியின் மேற்பரப்பில் ஒரு இடத்தின் குறுக்குப் பகுதியில் வெடிப்பு நிலை காணப்பட்டது. இவ்வாறே, வீதி மேற்பரப்பின் இரு மருங்கிலும் கொங்கிரீட் கலவை நலிவான நிலையில் காணப்பட்டதுடன், ஹனிகொம் அறிகுறிகள் வெளிப்பட்டிருந்தன. அப் பகுதிகள் எளிதாக கையால் உடைக்கக் கூடிய நலிவான நிலையில் காணப்பட்டமை 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போதான வருமானச் செலவின விடயங்களிற்கிடையே ஏற்பாடு மாற்றப்பட்டதை அடுத்தும், பாதீடப்பட்ட மற்றும் உள்ளபடியான 28 வருமானம் விடயங்களில் 09 சதவீதம் முதல் 100 இற்கு மேலாகவும் 52 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலும், கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 31 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,457,434 தொகையான ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாது மொத்த ஏற்பாடும் எஞ்சியிருந்ததுடன், 05 வருமான விடயங்களுக்காக ரூபா 188,518 தொகையான மதிப்பீட்டு ஏற்பாடுகளில் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகளின் போது அபிவிருத்திட்டங்கள் பெறப்பட்டு முன்னுரிமைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு இதன் படி, எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்படும் செயற்திட்டங்களிற்காக முறையாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் இருந்து மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டு அம் மதிப்பீட்டின் பெறுமதியின் படி பாதீட்டு மதிப்பீடு

தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 101 தொழில்களுக்காக அமைச்சரவை ஏற்பாடாக ரூபா 8,409,000 தொகையும் பொது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 8,140,707 தொகையான மொத்தப் பெறுமதியைப் பயன்படுத்தி பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கு உரித்தான பாதீட்டின் படி, சபையின் அனைத்துச் சொத்துக்களுக்காகவும் உறுதி வரைதல், வேலி எல்லை குறித்து ஆதன தீர்வு காணல், அநுரகம, உணுவின்ன மற்றும் பொரகொல்ல கிராமத்திற்காக நீர்த் திட்டம் ஆரம்பிக்கப்படல், வீதவரி அதிகார எல்லைப் பிரதேசத்தை விரிவாக்கி பெல்வுட் ஸ்ரீயாகம சந்தியில் வாராந்த சந்தையை ஆரம்பிப்பதே முக்கிய நோக்காகக் காணப்பட்ட போதிலும், அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சொத்து முகாமைத்துவம்

### 4.2.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 06 ஆண்டுகளுக்கு முன்னர் மொறகொல்ல சபை வளாகத்தில் வெட்டி அகற்றப்பட்டிருந்த 02 டேர்பன் டைன் மரங்களும் 02 பைன்ஸ் மரங்களும் கூறாக்கப்பட்ட ரூபா 456,575 பெறுமதியான மரங்களின் இருப்பு, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாதும் பதிவு செய்யப்படாதும் களஞ்சியத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 19.853,679 பெறுமதியான 05 வாகனங்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | சபையிடம் உள்ள கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிராமை. |
| | | (ii) | காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொண்டிராமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | களஞ்சியப் பொருட்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதில் நலிவான நிலை காணப்பட்டது. |
| | | (ii) | பயன்படுத்தப்படாத இருப்பு காணப்பட்டமை |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகன ஓட்ட அட்டவணைகள் முறையாகப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | வாகனங்களின் பாதுகாப்பு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | வாகனங்களின் உரிமை கையேற்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவையான வருமானத்தின் சேகரிப்பு நலிவாகக் காணப்பட்டது. |
| | | (ii) | வருமானச் சேகரிப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | தரம் இன்றி நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல் |
| | | (ii) | பின்தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராமை |
| | | (iii) | கண்காணிப்பு நடவடிக்கைகள் நலிவாகக் காணப்பட்டமை |
| | | (iv) | நிர்மாணிப்புகள் முடிவுறுத்தப்பட்டிராததன் காரணமாக கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராமை. |